2. தீர்மானம்

பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்களைத் தற்காலிக நீக்கம் செய்யும் தீர்மானத்தை முடிவுறச் செய்தல்

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே இந்த அவையில் முழு அவையினுடைய தலைவராக நீங்கள் வீற்றிருக்கின்ற கண்கொள்ளாக் காட்சியை நாங்கள் காண வேண்டுமென்பதுதான் எப்பொழுதும் விருப்பம். அப்படித் தான் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான ஒரு உரிமை மீறல் பிரச்சினையை நாங்கள் கொடுத்திருந்தோம். இன்று அவர்கள் இல்லை. எனவே அவர்களை மீண்டும் இங்கே அழைக்கின்ற ஒரு நல்ல பணியினைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்கின்றேன்.

ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பதவி விலகல் செய்யவேண்டுமென்று இந்த அவையிலே எழுப்பிய போது நாங்கள் எல்லாம் கடுமையாக அதனை எதிர்த்து ஜன நாயகக் கடமையின் காரணத்தினாலே அவர்கள் இருக்கவேண்டு மென்று நாங்கள் விரும்பினோம். அதைப் போலவே உங்களை நான் கனிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவரையும், மற்றவர்களையும் நீங் கள் வெளியே அனுப்பியதற்குக் கூறிய காரணங்களைவிட சில கொடுமையான, கடுமையான நிகழ்ச்சிகளை இங்கே நடத்தியவர்களிலே சிலர் இங்கே இருக்கின்றார்கள் என்பது நமக்குத் தெரியும். எனவே அவைகளைப் பற்றி எல்லாம்கூட பெரிதாக நினைக்காமல் தயவு செய்து உங்களைக் கனிவோடு இந்திய தேசியக் காங்கிரஸ் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் அனைவரையும் மீண்டும் இங்கே அழைக்கின்ற வகையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டுமென்பதை என்னுடைய பணிவான விண்ணப்பமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அன்புக்குரிய குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையோடு நானும் ஒன்றுபடுகிறேன். எதிர்க்கட்சி இல்லாமல் அல்லது எதிர்க்கட்சிகள் இல்லாமல் இந்த அவையினுடைய நடவடிக்கைகளை நடத்தவேண்டும் என்கின்ற குறுகிய மனப் பான்மை எனக்கோ, இந்த அரசுக்கோ நிச்சயமாக இல்லை என்பதை நான் அவருக்கும் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர் களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைக் கடந்த 10 நாட்களுக்கு மேலாக நான் அரும்பாடுபட்டுத் தயாரித்து அது அமைதியான முறையிலே இங்கே படிக்கப்பட்டு, அதன் அடிப்படையிலே மக்கள் பணிகள் தொடரவேண்டும் என்கின்ற அடக்கமுடியாத ஆசையின் காரண மாகத்தான் இந்த அவையிலே படிப்பதற்கு நான் முன்வந்தேன்.

அப்படிப்பட்ட நேரத்திலே நான் படிக்கின்ற நிதிநிலை அறிக்கைக்குக் குந்தகம் ஏற்படவேண்டும் என்று நானோ அல்லது ஆளுங்கட்சியினரோ நிச்சயமாக எண்ணியிருக்க மாட்டோம். நான் காரணங்களை இப்போது கண்டு பிடிக்க விரும்பவில்லை. அவைகளைத் தேடி அலையவும் நான் எண்ணிடவில்லை. நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே நண்பர் குமரி அனந்தன் அவர்களுடைய பிரச்சினையை நான் அணுகுகின்றேன். இந்த அவையினுடைய கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு இருப்பதைப் போலவே அசைக்க முடியாத நம்பிக்கை எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கும், இன்றைக்கு எதிர்க்கட்சியினுடைய தலைவரும், மற்றவர்களும் இல்லாவிட்டாலும், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அன்பிற்குரிய மூப்பனார் போன்றவர்களுக்கும், மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மற்றும் உள்ள ஜனதா தளம், ஜனதா கட்சி ஆகிய எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறிய அந்த வார்த்தையை ஏற்று, அன்றையதினம் ஏற்பட்ட ஓர் உணர்ச்சியின் காரணமாக, கொந்தளிப்பின் எதிரொலியாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற்று, எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் வந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய தீர்மானத்தைப் பேரவையினுடைய முன்னவர் அவர்கள் இங்கே முன்மொழிவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இந்த அவைஏற்றுக்கொள்ளும், மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

•

மாண்புமிகு **பேராசிரியர் க. அன்பழகன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : '' *25—3—1989*ஆம் நாளன்று பேரவையில் பேரவை விதி 121(2)-ன் கீழ், இப்பேரவையின் 28 உறுப்பினர்களை *31—3—1989* முடிய பேரவைப் பணியினின்றும் தற்காலிக நீக்கம் செய்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இன்றுடன் முடிவுறச் செய்யலாம் ''.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, இதே பிரச்சினையைத் தான் அன்று நான் இந்த சபையிலே கிளப்புவதற்காக முயன்று எனக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அதைப்பற்றி நான் குறை கூறவில்லை. ஆனால் ஒரு எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்களே இல்லாமல் இந்த பட்ஜெட் விவாதத்தினுடைய முதல் பகுதியாகிய 5 நாட்கள் கொள்கைகள் சம்பந்தமானவை' கொள்கைகள் சம்பந்தமாக அந்தக் கட்சிகள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை நாங்கள் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைக்குக்கூட இடம் இல்லாமல் அவர்கள் அத்தனை பேரும் வெளியிலே போயிருக்கிறார்கள்.

ஆனால் இந்த அவையிலே நடந்திருக்கும்படியான அமளியில் ஒரு சீப் மினிஸ்டர் கையிலிருந்து பட்ஜெட் காகிதத்தை பிடுங்கி கிழித்து எறியக்கூடிய நிலைமையையும், கடுமையான பலாத்கார தூண்டுதலையும், தாக்குதலையும் வன்மையாக நான் கண்டிக் கிறேன். அப்படிப்பட்ட நிலைமை சபையிலே நடக்கக் கூடாது. இதனால் சபையினுடைய எந்த ஒழுங்கையும் காப் பாற்ற முடியாது. இது எந்த மரபுக்கும் உட்பட்டது அல்ல. ஒரு தரம் தூண்டிவிட்டால் என்ன நடக்கும் என்பதையும் நாம் இப்போது கண்ணாலே பார்த்தோம். ஆகவே அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆனால் அதற்கான முறையில் ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதை நான் மிகுந்த மகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொள்கிறேன். அந்த எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைவரும் வந்து இருந்து இந்த சபையை நடத்து வதற்கு, அவர்களுடைய கொள்கையைச் சொல்லுவதற்கு அனு மதிக்கப்படவேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பேரவையினுடைய முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் செய்தி கிடைக்குமே யானால் இன்றைக்கே கூட எதிர்க்கட்சியினுடைய தலைவரும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அவைக்கு வரலாம். ஒரு வேளை செய்தி அவர்களுக்கு தாமதமாகக் கிடைக்குமானால் நாளை முதல் அவர்கள் அவைக்கு வரலாம். வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சொன்னவைகளுக்கு நன்றி தெரிவித் துக்கொள்கிறேன். அதனாலே மாண்புமிகு ரமணி அவர்கள் சொல்கிறபோது, 'அவர்கள் என்ன சொல்கிறார்கள்' என் பதைக் கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கும் தக்க பதிலை அளித்தார்கள். எனவே அன்று நான் கொடுத்திருந்த உரிமை மீறலைப் பற்றிய செய்திகள் உங்களுடைய தீர்ப்பின் அடிப்படையிலே வரக்கூடும். நீங்கள் நல்ல உள்ளத்தாலே அதைப் பேசுவதற்கு என்னை அனுமதிக்கக்கூடும் என்று கருதுகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் வருவதற்குரிய வாய்ப்பை முதல்வர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்து விட்ட காரணத்தி னாலே, அவர்கள் வந்ததற்குப் பிறகு, அதை விவாதிப்பதற்கான சூழ்நிலையை இங்கே உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையிலே முந்தாநாள் இது சம்பந்தமாக தீர்மானம் வரும்போது கருத்து சொல்வதற்காகத்தான் நான் எழுந்து நின்றேன். எந்தக் கருத்தும் சொல்வதற்கு வாய்ப்பு

1989 மார்ச் 27] [திரு. சோ. அழகர்சாமி]

அளிக்கப்படாமல் உடனடியாக பூண்டோடு எதிர்க் கட்சியினுடைய அத்தனை பேரையும் நீக்கக்கூடிய தீர்மானத்தை இங்கே நிறைவேற்றினீர்கள். இன்றைக்கு தமிழகம் பூராவிலும் மிகக் கொந்தளிப்பான நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஆகவே, இந்த கொந்தளிப்பான நிலையைப் போக்கி சுமுகமாக இந்தச் சட்டமன்றம் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்கு முழுமுதற் பொறுப்பு ஆளும் கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் தான் இருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன். இதற்கு முன்னால் 10, 20 ஆண்டுக்காலமாக சட்டசபையில் இருந்திருக்கிறேன். இரண்டு சபாநாயகர்கள் இருந்து சபை நடந்தபோது கூட இம்மாதிரிச் சம்பவம் நடந்தது இல்லை; அப்போது கூட இவ்வளவு அமளி துமளிப்பட்டதாகக் கூட நான் நினைக்கவில்லை. ஆகவே, இனிமேலாவது கண்ணியமாக இந்தச் சபை முறையாக நடப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை பேரவைத் தலைவர் அவர்களும் ஆளும் கட்சியின் அரசாங்கமும் செய்தால் நலம் என்று என்னுடைய கருத்தைச் சொல்லி, எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் எந்தத் தீர்மானம் வந்தாலும் கருத்துச் சொல்வதற்கு வாய்ப்பே அளிக்காமல் இருப்பது நியாயம்தானா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும் உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் சொன்ன கருத்துக்களை நான் மதிப்போடு ஏற்கிறேன். தங்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து அல்ல. கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் 13 பேர்கள் மட்டும் தான் விவாதத்திலே பங்கு பெற்றிருக்கிறார்கள். எதிர்க் கட்சியினைச் சேர்ந்தவர்கள் 31 பேர்கள் பங்கு பெற்றிருக்கிறார்கள். எனவே, நான் உங்களை ஒதுக்குபவனோ, மறுப்பவனோ அல்ல. எனினும், அன்றைக்கு மொழியப்பெற்றது அரசினுடைய தீர்மானம். அந்தத் தீர்மானத்தின் வடிவில் இருக்கின்ற விதியை மட்டும் நான் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ''பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் மொழியப்பெற்று அதனைப் பேரவைத் தலைவர் 'எவ்வித விவாதமும் இன்றி' என்று தமிழிலும் 'Without any Discussion' என்று ஆங்கிலத்திலும் உடனடியாகப் பேரவையின் முடிவிற்கு விட வேண்டும்'' என்று இருக்கின்ற விதியைத்தான் பின்பற்றினேனே தவிர, உங்களை நான் புறக்கணித்தவன் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மனமுவந்து இந்த அவையில் ஜனநாயகம் செம்மையாகவும், நிறைவாகவும் செயல்பட வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தில், அன்றைக்கு எது நடந்திருந்தாலும் நம்முடைய பணி ஜனநாயக மரபுக்கு ஏற்ப நடைபெற வேண்டும், மக்களுக்கு அது

திருப்தியை ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில், அன்றைக்கு நிறைவேற்றிய தீர்மானத்தை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர் உட்பட இந்த அவையில் கலந்து விவாதங்களிலே பங்கு பெற்று அவர்கள் கடமையை ஆற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் கொண்டு வந்த தீர்மானத்தை நானும் மனதார வரவேற்கிறேன். ஆனால் நாம் நம்மைப் பற்றியே சிந்தித்துப் பார்க்கக்கூடிய கடமை உடையவர்களாக இருக்கிறோம் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாம் நம்மைப்பற்றியே சிறிது நேரம் சிந்தித்துக் கொள்ள வேண்டும் என்று இன்றைக்கு நாடு எதிர்பார்க்கின்றது.

நான் தங்களை வரவேற்று, வாழ்த்திப்பேசும்போதே ஒரு சொற்றொடரைப் பயன்படுத்திச் சொன்னேன். இந்த அவை சொற்போர் நடத்துகிற இடமே தவிர மற்போர் நடத்து கிற இடம் அல்ல, எனவே, அந்த வகையில் இந்த அவையை நடத்துவதற்கு உங்களுக்கு நாங்கள் எதிர்க்கட்சித் தரப்பிலேயும், ஆளும் கட்சித் தரப்பிலேயும் ஆதரவு தருவோம் என்று உங்களுக்கு வாக்குறுதி தந்தோம். அதிலே கொஞ்சம் தொய்வு ஏற்பட்டதைக் குறித்து இன்றைக்கு நாம் மிகுந்த மனவேதனை அடைகிறோம். நம்முடைய சட்ட நெறிமுறைகளுக்கு ஏற்ப நாம் அனைவரும் நம்மையே ஒரு கட்டுப்பாட்டுக்குள் அமைத்துக் கொண்டால் தான் நாடு நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் என்பதையும், இந்த அவையினுடைய கட்டுப்பாட்டைத் தங்கள் மூலமாகத்தான் நாம் நிறைவேற்ற முடியும் என்பதையும் கட்டுப்பாடாக எல்லோரும் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். இல்லையென்றால் இந்த அவையை நடத்துவது எந்தக் காலத்திலும் மக்களுக்குத் திருப்தி தரும் வகையில் அமையாது என்பதையும் மிகுந்த மன வேதனையுடன் நாம் சொல்லக்கூடிய கடமை உடையவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் ஆளும் கட்சிக்கு இருக்கக்கூடிய பொறுப்பை இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய ஜனநாயக அமைப்பில் ஆளும் கட்சிக்கு இருக்கக்கூடிய அதே பொறுப்பை எதிர்க்கட்சி அதுவும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சி, அதைத்தான் ''Shadow Cabinet'' என்று ''House of Commons'' உடைய மரபிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆளும்கட்சிக்கு இருக்கிற பொறுப்பை பிரதான எதிர்க் கட்சியும் ஏற்றுநடத்த வேண்டும். தராசுக்கு இருக்கிற இரண்டு தட்டுகளைப் போல இந்த இரண்டும் சமமாக பொறுப்பை ஏற்று நடந்து கொண்டால்தான் இந்த அவையினுடைய கண்ணியம் காப்பாற்றப்படும் என்பதை நான் விளக்கிச் சொல்லத் தேவையில்லை எனவே, இனிமேலாவது நாம் சொற்போரை நிகழ்த்துவோம் சூடாகக் கூட பேசுவோம். ஆனால், அதற்காக இத்தகைய நாடு விரும்பாத நடைமுறைகளை நாம் கையாள்வது நல்லது இல்லை. என்பதோடு, ஒரு சிலர் தான் இந்த விவாதங் களிலே நேரத்தை எடுத்துக் கொள்வது ஏற்புடையதல்ல; எங

களைப் போன்றவர்கள் இந்தப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு இருப்பவர்கள் எல்லாம் தங்களுடைய பார்வையைப் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்தாலும் தங்களுடைய பார்வையை நாங்கள் ஈர்க்க முடிவதில்லை; அதைத்தான் திரு. அழகர்சாமி அவர்களும் சுட்டிக்காட்டினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய பார்வை மிகவும் பரந்தது ;

திரு. ம்எ. அப்துல் லத்தீப் : அதனால், இனிமேலாவது எதிர் வரிசையிலே—அந்தப் பக்கத்திலே இருக்கக்கூடியவர்கள் தான், நீண்ட நேரம் எடுத்துக்கொள்வதும், அதிகமான சூடு ஏறக்கூடிய விவாதங்களிலே கலந்து கொண்டு, அது வேறு வகையிலே செல்லக்கூடிய வகையிலேயெல்லாம் நடந்து கொள்வதும், மற்ற உறுப்பினர்களுடைய உரிமைகள் அதனால் பாதிக்கப்படுவதும் ஏற்புடையது அல்ல என்பதை மிகுந்த பணிவோடு, தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய இந்தத் தீர்மானத்தை நானும் மனமுவந்து, மனதார வாழ்த்தி வரவேற்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் அரசுத் தரப்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இன்று திரும்பப் பெற்றுக் கொண்ட தமிழக முதல்வர் அவர்களுடைய பெருந்தன்மையைப் பாராட்டுவதோடு, இங்கே அதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடாது என்று தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதனால் ஆளுங் கட்சி மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தரப்பிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுமே சுய கட்டுப்பாட்டோடு நடந்து கொள்வார்களேயானால், ஆவேசத்தை மறந்து, மற்றவைகளையெல்லாம் மறந்து, சுய கட்டுப்பாட்டோடு தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வார்களேயானால், இந்தச் சபையினுடைய கண்ணியம் காப்பாற்றப்படும் என்ற நிலையில், இன்றைய தினம் இத்தகைய ஒரு தீர்மானத்தை வழிமொழிந்த பரந்த மனப்பான்மை கொண்ட தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : 25–3–1989ஆம் நாளன்று பேரவையில் பேரவை விதி 121(2)-இன் கீழ், இப்பேரவையின் 28 உறுப்பினர்களை 31–3–1989 முடிய பேரவைப் பணியினின்றும் தற்காலிக நீக்கம் செய்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இன்றுடன் முடிவுறச் செய்யலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பெருமக்களே, இன்றைய அலுவல்களை முறைப்படி நடத்த மிகச் சிறந்த முறையில் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இப்போது வினாநேரம்

3. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அரசு அலுவலர்களின் ஓய்வு பெறும் வயது

1—*வினா எண். 371) திரு. நா இராமகிருஷ்ணன்: மற்றும் திரு. ல.முல்லைவேந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதை மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அத்தகைய செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையிலில்லை.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள் ஓய்வுபெறும் வயதைப்பற்றிய வினாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடை அளித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ஓய்வு பெறும் வயது என்ன ? மற்ற மாநிலங்களிலே ஓய்வு பெறும் வயது என்ன, என்ன இருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து அவைக்குத் தெரிவிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஓய்வுபெறும் வயது முதலில் 55 ஆக இருந்து, பிறகு ஓய்வு பெறும் வயது 58-ஆக அரசு ஆணை எண் 532-இன்படி உயர்த்தப்பட்டது. மற்ற மாநிலங்களில் மாநில அரசுப் பணியாளர்களுடைய ஓய்வு பெறுகின்ற வயது :

அரியானாவில் 58 ; ஜம்மு-காஷ்மீரில் 55 ; கர்நாடகாவில் முதலில் 58ஆக இருந்து 1981-இல் 55 ; கேரளாவில் முடிவில் 55 ஆக இருந்து 1984-இல் 58; மத்தியப் பிரதேசத்தில் 58 ; மராட்டியத்தில் 58 ; ஒரிஸ்ஸாவில் 58 ; ராஜஸ்தானில் 55 ; உத்திரப் பிரதேசத்தில் 58 ; மேற்கு வங்காளத்தில் 58 .

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக, அரசு ஊழியர் பணி ஓய்வுபெறும் வயது குறைக்கப்படும் என்று அந்த அரசு ஊழியர்கள் அச்சப்படுகிற செய்திகள் வந்திருக்கிற காரணத்தால் குறைக்கும் எண்ணம் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்தினால் உதவிகரமாக இருக்கும்.